முதன்மை மாவட்ட நீதிமன்றம், கடலூர் மாவட்டம், கடலூர்.

OS. 391 /2021

2023 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 25 ஆம் நாள் வா.த.சா 1-ன் வாக்குமூலம்

இந்திய உறுதிமொழிச்சட்டம் (44/1969)-ன் விதிமுறைகளின்படி முதன்மை மாவட்ட நீதிபதி திரு.எஸ்.ஜவகர், B.L., அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அலமேலு | வயது | : | 46 |
| தந்தை/கணவர் பெயர் | : | ரெங்கராமானுஜம் | தொழில் | : | |
| கிராமம் | : | | ஜாதி | : | |
| தாலுக்கா | : | | சமயம் | : | |
| மாவட்டம் | : | | | : | |

பிரதிவாதிதரப்பில் குறுக்கு விசாரணை- நான் 9 ஆம் வகுப்பு வரை படித்துள்ளேன். என் கணவர்தான் இந்த வழக்கை தாக்கல் செய்தார். வழக்கு தாக்கல் செய்ய வக்கீலுக்கு தகவல்கள் சொன்னார். இந்த வழக்கை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல. என் வீட்டுக்காரர் சொல்லி தெரியும். வழக்கை நடத்த என் கணவர் பவர் பத்திரம் கொடுக்கவில்லை. என் கணவர் பக்கவாதத்தால் பாதிக்கப்பட்டுள்ளதால் அவரால் சாட்சியம் அளிக்க முடியாது. அவர் உடல்நலம் சரியில்லாதது குறித்து ஆவணம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணங்கள் இந்த வழக்கில் குறியீடு செய்யவில்லை என்றால் சரிதான். என் வீட்டுக்காரரின் தம்பியிடம் பாகம் கேட்டு வழக்கு போட்டுள்ளோம். பாகம் கேட்டு போட்டுள்ள சொத்தின் சர்வே எண், பட்டா நம்பர், சக்குபந்தி தெரியாது. இந்த

சொத்து ஆதியில் என் வீட்டுக்காரரின் அப்பா, அம்மாவிற்கு பாத்தியமான சொத்து. என் வீட்டுக்காரரின் அப்பா, அம்மா என் வீட்டுக்காரருக்கு பாகமோ, கிரயமோ செய்யவில்லை. இந்த வழக்கு சொத்து என் கணவர் பெயரிலும், பிரதிவாதி பெயரிலும் உள்ள கூட்டு பட்டா சொத்து. என் கணவர் ஊரக வளர்ச்சித்துறையில் துணை வட்டாரவளர்ச்சி அலுவலராக இருந்தார். என் கணவர் கூட பிறந்தவர்கள் 3 பெண்கள், 2 ஆண்கள். பெரியக்கா பெயர் காவேரி, 2 வது அக்கா மலர்விழி, 3 வது என் வீட்டுக்காரர், 4 வது தங்கச்சி மல்லிகா, 5 வது சம்பத்குமார். 2019 ல் என் கணவர் அரசு பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

பிரதிவாதிதரப்பில் குறுக்கு விசாரணை வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்படுகிறது.